செய்தி வெளியீடு எண்: 740 நாள் (09.12.2011)

**<u>மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டு மாநிலம் முழுவதும் பெரும் வரவேற்பினைப் பெற்றுள்ள புதிய விரைவுப் பட்டா மாறுதல் திட்டம் மற்றும் பிற திட்டங்கள் குறித்தும் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் அனைத்து கோட்டாட்சித்தலைவர்களின்</u>**

**<u>இன்று (09–12–2011) ஆய்வுக்கூட்டம்</u>**

அரசால் செயல்படுத்தப்படும் ஒவ்வொரு திட்டமும் ஏழை எளிய மக்களுக்கு உரிய நேரத்தில் சென்றடைந்திட வேண்டும் என்பதை என்றென்றும் கருத்தில் கொண்டு செயல்பட்டு வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், பட்டா வழங்குவதில் தொன்றுதொட்டு பின்பற்றப்பட்டு வந்த நடைமுறைகளை எளிமைபடுத்தி, புதிய விரைவுப் பட்டா மாறுதல் திட்டத்தினை கடந்த சூலைத் திங்களில் தொடங்கி வைத்தார்கள். மாநிலம் முழுவதும் பெரும் வரவேற்பினைப் பெற்றுள்ள இத்திட்டம் குறித்தும், வீட்டு மனைப்பட்டா வழங்குதல், முதியோருக்கான ஓய்வூதியத்தொகையினை விரைந்து வழங்குதல் மற்றும் பள்ளியில் பயின்று வரும் மாணவ மாணவியர்களுக்குத் தேவையான வகுப்புச்சான்றிதழ், இருப்பிட சான்றிதழ் மற்றும் வருமான சான்றிதழ்கள் உள்ளிட்டவைகளை தாம் பயிலும் பள்ளிகளிலேயே தலைமை ஆசிரியர்களிடம் விண்ணப்பித்து, அச்சான்றிதழ்களை பள்ளிகளிலே பெறுதல், மற்றும் வருவாய்த்துறையின் சார்பில் செயல்படுத்தப்பட்டுவரும் பல்வேறு திட்டப்பணிகள் குறித்து மாவட்ட அளவிலான வருவாய் கோட்டாட்சியர்கள் பங்கேற்ற ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி அவர்கள் தலைமையில் இன்று (09.12.2011) தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் 76 வருவாய் கோட்டாட்சியர்கள் கலந்து கொண்டனர்.

இன்று (09.12.2011) நடைபெற்ற இக்கூட்டத்தில், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தமது தலைமையுரையில், 'மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிமுகம் செய்யப்படும் எந்த ஒரு திட்டமானாலும் அது உரிய மக்களை; உரிய நேரத்தில் சென்றடைந்திட வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளதோடு மட்டுமின்றி, திட்டங்களை நடைமுறைபடுத்திடும் போது ஏற்படும் நிறை குறைகளைக் கேட்டறிந்து, அவைகளை உடனடியாக களைந்திட உரிய நடவடிக்கைகளை உடனுக்குடன் மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார்கள்.

அதனடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட விரைவுப்பட்டா மாறுதல் திட்டம் குறித்து, இதுவரையில் சென்னை மற்றும் பல்வேறு மாவட்டங்களில் தொடர்ந்து பல ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டதன் பயனாக, கடந்த 5மாத காலங்களில் 8.10 இலட்சம் மனுக்கள் மீதான இறுதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது. இது தமிழக வரலாற்றில் இதுரையில் நிகழ்த்தப்படாத சாதனாயாகும் மேலும், 42,777 ஏழை எளியோருக்கு வீட்டுமனைப் பட்டாக்களும் வழங்கப்பட்டு உள்ளது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்.

மாநிலத்திலேயே முதன்முறையாக, சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், சுமார் 25 இலட்சம் முதியோர் உள்ளிட்ட தகுதியான பயனாளிகளுக்கான உதவித் தொகை வழங்கப்படுகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட வங்கிகள் மூலமாக ஓய்வூதியம் வழங்கும்

திட்டம் ஒய்வூதியம் பெறுவோரிடம் நல்ல வரவேற்பினைப் பெற்றுள்ளது. தற்பொழுது கூடுதலாக 5.36 இலட்சம் தகுதியான பயனாளிகளுக்கு ஒய்வூதியம் வழங்கிட மாவட்ட அளவில் நடவடிக்கை துரிதப்படுத்தப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டுள்ள மற்றுமொரு உன்னதத்திட்டமே 10ஆம் வகுப்பு பயின்றிடும் மாணவ மாணவியர்களுக்குத் தேவையான வகுப்புச்சான்றிதழ், வருமானச் சான்றிதழ் மற்றும் இருப்பிடச் சான்றிதழ் முதலியவற்றை அந்தந்த பள்ளிகளின் மூலமாக வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், நாளதுவரையில் மாநிலம் முழுவதும் பள்ளிகளிலிருந்து பெறப்பட்டுள்ள விண்ணப்பங்களில் அரசாணையின்படி, 9.8 இலட்சம் மாணவர்களுக்கு 2012 ஜனவரி மாதத்திற்குள்ளாக சான்றிதழ்கள் வழங்கப்பட இருக்கின்றன. இதுவும் என்றும் இல்லாத அளவுக்கு இந்த சாதனை அமைந்துள்ளது.

மாநிலமுழுவதுமுள்ள ஏழை எளிய விவசாயப் பெருமக்களுக்கு பெரிதும் பயன் தரும் வகையில் ‘முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டமானது ’மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கடந்த 10.09.2011 சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டு அன்றைய தினமே அரசாணையும் வெளியிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 68.41 இலட்சம் குடும்பத்தலைவர்களுக்கு அடையாள வில்லைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இத்திட்டத்தின் கீழ், தற்பொழுது நடைபெற்று வரும் கணக்கெடுக்கும் பணியினை விரைந்து முடிக்குமாறும் இக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

அண்மையில் வடகிழக்கு பருவமழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் போர்க்கால அடிப்படையில் நிவாரணப்பணிகள் மேற்கொள்ளவும், நிவாரண உதவித் தொகையினை விரைந்து வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கடந்த 07.11.11 மற்றும் 29.11.11 ஆகிய நாட்களில் உயர் மட்ட அளவிலான ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டு, நிவாரணப்பணிகள் முடுக்கி விடப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கும் மற்றும் கால்நடைகளுக்காக உயர்த்தி வழங்கப்பட்டு உள்ள நிவாரண நிதியுதவியானது 24 மணி நேரத்திற்குள்ளாக வருவாய்துறையின் மூலம் உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்று கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் வருவாய்த்துறை முதன்மைச் செயலர் திரு. ஆர். இராஜகோபால் இ.ஆ.ப., முதன்மைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் திரு. கு. ஞானதேசிகன் இ.ஆ.ப., முதன்மைச் செயலர் / நில நிருவாக ஆணையர் திரு. ஸ்வரன் சிங் இ.ஆ.ப., நில சீர்திருத்த ஆணையர் திருமதி. ஜெயஸ்ரீரகுநாதன் இ.ஆ.ப., வருவாய் நிருவாக கூடுதல் ஆணையர் திரு. ராஜேஷ் லக்கானி இ.ஆ.ப., இணை ஆணையர் (பேரிடர் மேலாண்மை) திரு. ஜெயகாந்தன் இ.ஆ.ப., உள்ளிட்ட உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**முதன்மைச் செயலர் வருவாய் நிருவாக ணையருக்காக**
**எழிலகம், சேப்பாக்கம் சென்னை –4.**

வெளியீடு: –

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.